# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.06.17 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# உயர்கல்வி
# (தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்)

**உயர் கல்விக்கான நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அத்துடன் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் நியமத்தைத் தீர்மானித்தல் பற்றிய தேசிய கொள்கைக்கு இணங்க உயர் கல்விக்கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக்குழு என அறியப்படும் ஆணைக்குழுவொன்றைத் தாபித்தலை ஏற்பாடுசெய்வதற்கும்; உயர் கல்வி நிறுவனங்களின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்திற்கான சட்டக் கட்டுக்கோப்பொன்றைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 96.00** | **தபாற் செலவு : ரூபா 45.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**உயர்கல்வி**
***(தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்)***

*ச. வ- ஓ. 29/2011*

***உயர் கல்விக்கான நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான அத்துடன் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒருங்கிணைப்பு மற்றும் நியமத்தைத் தீர்மானித்தல் பற்றிய தேசிய கொள்கைக்கு இணங்க உயர் கல்விக்கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக் குழு என அறியப்படும் ஆணைக்குழுவொன்றைத் தாபித்தலை ஏற்பாடு செய்வதற்கும்; உயர்கல்வி நிறுவனங்களின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்திற்கான சட்டக் கட்டுக்கோப்பொன்றைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** (1) இச்சட்டம், 2019ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உயர்கல்வி (தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டம் அதன் ஏற்பாடுகள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதி அல்லது தேதிகளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 79ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படுகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்

பாகம் I

## உயர் கல்விக்கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக்குழு

*உயர் கல்விக்கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக் குழுவைத் தாபித்தல்.*

**2.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், (இதனகத்துப் பின்னர் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) உயர் கல்விக்கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக் குழு என அழைக்கப்படும் ஆணைக்குழுவொன்று, உயர்கல்விக் கான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்துக்கான தேசிய அதிகார சபையாக தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாதல் வேண்டும் என்பதுடன், அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

*ஆணைக் குழுவின் குறிக்கோள்கள்.*

**3.** ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) உயர் கல்வி நிறுவனங்களில் கல்விசார் தகைமைகளின் தரத்தின் உயர் நியமத்தைப் பேணுவதற்கு நல்லாட்சி பற்றிய நெறிகளை அடிப்படையாகக் கொண்ட தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார முறைமை யொன்றைத் தாபித்தலும்;

(ஆ) தேசிய மட்டத்தில் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்துக்கான உச்சகுழுவாக செயற்படுதலும்; அத்துடன்

(இ) குறுக்கு நடமாட்டத்தை வசதியளிப்பதற்கு இலங்கை தகைமைகள் கட்டுக்காப்பிற்கு இணங்க (இதக) வெவ்வேறு தகைமைகளை எடுத்துக்கூறுதலும்.

ஆணைக் குழுவை அமைத்துரு வாக்குதல்.

**4.** *(1)* ஆணைக்குழுவானது பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் அதாவது -

(அ) (i) உயர்கல்வி எனும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சரின் மேலதிகச் செயலாளரொருவர்;

(ii) நிதி எனும் விடயத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சரின் மேலதிகச் செயலாளர்;

(iii) பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது அத்தகைய தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழுவின் உபதவிசாளர்;

(iv) 1991ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது அத்தகைய தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழுவின் உபதவிசாளர்; அத்துடன்

(ஆ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினைந்து ஆட்கள் கொண்ட குழாமிலிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு ஒன்பது உறுப்பினர்கள்

ஆகியோரைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினைந்து ஆட்களைக் கொண்ட குழாம், கல்விசார் தகைமைகள், அறிவு, அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களும் தர உறுதிப்பாடு, கல்விசார், உயர்தொழில்சார், வர்த்தகமுகாமை, கைத்தொழில்சார், விஞ்ஞானம்சார், சட்ட அல்லது நிருவாகத்துறையில் அல்லது ஏதேனும் வேறு இயைபான துறையில் எண்பிக்கப்பட்ட ஆற்றலைக் காட்டியுள்ளவர்களுமான ஆட்களில் உள்ளவர்களாகவிருத்தல் வேண்டும்.

(3) அமைச்சர், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக ஆளொருவரை நியமிப்பதற்கு முன்னர், அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதை பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறு ஆணைக்குழுவின் அலுவல்களில் நிதிசார் அக்கறையை அல்லது வேறு அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, அமைச்சர் அத்தகைய பெயர் நியமனங்கள் பால்நிலை உள்ளடங்கலாக இலங்கைச் சமூகத்தின் பன்மைத்துவப் பண்பை பிரதிபலிக்கின்றது என உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

(5) சனாதிபதி உயர்கல்வியில் தர உறுதிப்பாடு தொடர்பான கருமங்களைக் கையாளுவதில் அத்தகைய உறுப்பினரின் அனுபவத்தைக் கருத்திற்கொண்டு, தவிசாளராக (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(6) தவிசாளர் உள்ளடங்கலாக பதவிவழி உறுப்பினர்கள் தவிர்ந்த குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் முழு நேர உறுப்பினர் களாக பணியாற்றுதல் வேண்டும்.

**5**. (1) ஆள் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து, பெயர்குறித்து நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப் பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும் - *ஆணைக் குழுவின் உறுப்பின ரொருவராக விருப்பதற்கான தகைமை யீனங்கள்.*

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஆ) விடயத்துக்கேற்ப ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழான ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருப்பின் அல்லது துய்ப்பின்

(இ) ஆணைக்குழுவின் அலுவல்களில் ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருப்பின்;

(ஈ) ஆணைக்குழுவின் உறுப்பாண்மைக் காலத்தின் போது –

(i) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தில் ஏதேனும் தொழில் அல்லது வேலையில்; அல்லது

(ii) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் பேணுகை மற்றும் நிருவாகத்துக்கும் பொறுப்பாகவுள்ள நிறுவனமொன்றில் ஏதேனும் தொழிலில்

ஈடுபடின்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப் படின்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராகவிருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் ஏதேனும் குற்றவியல் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஏ) ஆணைக்குழுவின் முன்அனுமதியைப் பெறாமல் ஆறு தொடர்ச்சியான குழுக் கூட்டங்களுக்கு வருகைதரா திருப்பின்;

ஆயின் அத்தகைய வராமைக்கான அனுமதி கொடுக்கப்பட்ட எந்நேரத்திலும் மூன்று மாத காலப்பகுதியொன்றை விஞ்சுத லாகாது;

(ஐ) அவர் எழுபத்தி இரண்டு வயதிற்கு மேற்பட்டவராக விருப்பின்.

*உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றுதல்.*

**6**. சனாதிபதி, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் 4ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரை பின்வரும் சந்தர்ப்பங்களில் பதவியிலிருந்து அகற்றலாம் :-

(அ) அவர் 5ஆம் பிரிவில் தரப்பட்டவாறான தகைமைமை யீனங்கள் எவற்றிற்கும் அமைந்தவராகவிருப்பின்; அல்லது

(ஆ) அவர் ஏதேனும் உடலியலாமை அல்லது சித்தசுவாதீனம் காரணமாக அவரது கடமைகளை புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராகின்; அல்லது

(இ) அவர், ஆணைக்குழுவை அவமதிப்புக்கு உட்படுத்தக் கூடிய ஏதேனும் செயலை புரிபவராயின்.

*ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**7**. (1) தவிசாளர் உள்ளடங்கலாக ஆணைக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலே யொழிய அவரது நியமனத் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்குப் பதவிவகித்தல்வேண்டும் என்பதுடன் 6ஆம் பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், உறுப்பினர் எவரும் இரண்டு தொடர்ச்சியான காலப்பகுதிக்கு மேல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கான அறிவித்தலுடன் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அவரது கைப்பட்ட கடிதத்தின் மூலம் எச்சந்தர்ப்பத்திலும் விடயத்திற்கேற்ப தவிசாளர் ஒருவராக அல்லது உறுப்பினர் ஒருவராக அவரது பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுறுதல் வேண்டும்.

(3) நான்காம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது உறுப்பினர் ஒருவர் பதவிவிலகுகை பதவியிலிருந்து அகற்றுதல் அல்லது இறப்பு மூலம் பதவியை வறிதாக்கின், சனாதிபதி 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழாத்தின் எஞ்சிய உறுப்பினர்களிலிருந்து இன்னொரு ஆளை அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள், அவர் அடுத்துறும் தவிசாளர் அல்லது உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

(4) தவிசாளரானவர் சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்திற்காக தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், சனாதிபதி தவிசாளராக செயலாற்றுவதற்கு முழு நேர உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்.

**8.** (1) ஆணைக்குழு முழு நேர அடிப்படையில் பணியாற்றுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டங்கள் மாதம் ஒன்றிற்கு குறைந்த பட்சம் நான்கு தடவைகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளரானவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்துக்கு தவிசாளர் வருகைதராதிருப்பின், சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குவதற்கு சமூகமளித்துள்ள உறுப்பினர்களுள் இருந்து உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குறைந்தது ஓர் உறுப்பினர் முழு நேர உறுப்பினர் அல்லாத ஒருவராகவிருத்தல் வேண்டும்.

(5) வாக்குகள் சமமாகவிருக்கும் போது தவிசாளர் அல்லது அவர் வருகைதராதபோது ஏதேனும் கூட்டத்துக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்பினர்களின் வாக்குகள், ஆணைக்குழுவின் நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் (9)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் பங்கமின்றி, ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறைவானவர்கள் இலங்கையில் சமூகமாயிருப்பின்,இலங்கையில் இல்லாத உறுப்பினர் ஒருவர், ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் இலத்திரனியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்பாடல் வழிவகைகள் மூலம் கூட்டமொன்றில் பங்குபற்றலாம்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் கூட்டமொன்றில் பங்குபற்றுகின்ற உறுப்பினரொருவர் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவானது, அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை கொண்டுநடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) ஆணைக்குழுவின் செயல், முடிபு அல்லது நடவடிக்கைகள் எதுவும் ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

**9**. ஆணைக்குழு –

ஆணைக் குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகள்.

(அ) இலங்கை தகைமை கட்டுக்கோப்பை வகுத்தமைக்கலாம், நடைமுறைப்படுத்தலாம், நாளதுவரையாக்கலாம்;

(ஆ) தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பான கருமங்களின் மீது இலங்கையின் உள்ளேயும் வெளியேயும் உயர்கல்வியில் உள்ள ஏதேனும் உயர் தொழில்சார் அல்லது ஏதேனும் நியதிச்சட்டமுறையான அல்லது ஏதேனும் ஒழுங்குபடுத்தும் குழு அல்லது தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார குழுக்களுடன் இணைப்பு மற்றும் ஒத்துழைப்புத் தாபித்துப் பேணலாம்;

(இ) விதித்துரைக்கப்பட்ட கைந்நூல்கள், கருவிகள் உபாயங்கள் அல்லது இயைபான சர்வதேச நியமங்களுக்கு இணங்க உயர்கல்வி நிறுவனங்களின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்திற்கு தோதானவாறான கொள்கைகள், நியமங்கள் மற்றும் கட்டளைக் கற்களை தீர்மானிக்கலாம் என்பதுடன் நியமங்கள்,கட்டளைக்கற்கள், நடவடிக்கைமுறைகள் மற்றும் நடைமுறைகளை நாளதுவரையாக்கலாம்;

(ஈ) நிறுவனம்சார் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கணக்காய்வுகளையும் வெளிப்புற தர உறுதிப்பாட்டு பரிசீலனைகளையும் நடாத்துவதற்கு பயிற்றுவிக்கப்பட்டதும் அனுபவம் கொண்டவர்களுமான தரமான கணக்காய்வாளர்களை நியமிக்கலாம்;

(உ) உயர்கல்வி நிறுவனங்களுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரத்தை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய தராதர அங்கீகாரத்தை காலத்துக்குக் காலம் பரிசீலனை செய்யலாம்;

(ஊ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட தரம் மற்றும் நியமங்களுக்கு இசைந்திருக்காத உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட தற்காலிக தராதர அங்கீகாரம் அல்லது முழுமையான தராதர அங்கீகாரத்தை இல்லாதொழிக்கலாம்;

(எ) உயர்கல்வி நிறுவனம் ஒன்றினால் அல்லது நிகழ்ச்சித்திட்டமொன்றினால் தராதர அங்கீகாரத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பான எவையேனும் முறைப்பாடுகளை விசாரணைசெய்யலாம் என்பதுடன் தோதான நடவடிக்கையையும் எடுக்கலாம்;

(ஏ) அவசியமேற்படுமிடத்து இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு அல்லது வெளிநாட்டு கல்விசார் நிறுவனங்களுடனான கலந்தாலோசனையுடன் வெளிநாட்டு பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை ஏற்றுஅங்கீகரிக்கும் அல்லது தராதர அங்கீகாரமளிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள் அல்லது கல்விசார் சிறப்புகளை மதிப்பிடலாம்;

(ஐ) கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர்களை நிரலிற்சேர்த்தலுக்கான குறைந்தபட்ச சேர்த்தல் கட்டளைக்கற்கள் இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புடன் (இதக) இணங்கியொழுகின்றன என காலத்துக்குக் காலமும் அவசியமானவிடத்து இயைபான உயர்தொழில்சார் குழுக்கள் அல்லது நியதிச்சட்டமுறையான குழுக்கள் அல்லது ஒழுங்குபடுத்தும் குழுக்களுடனான கலந்தாலோசனை யுடன் மதிப்பிடலாம்.

(ஒ) உயர்கல்வி நிறுவனங்களினால் அளிக்கப்படும் பட்டங்கள் மற்றும் தகைமைகள் இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பில் (இதக) தரப்பட்டவாறு தகைமை விவரணம் மற்றும் கற்றல் விளைவுகளுக்கு இணங்கியொழுகின்றன என மதிப்பீடு செய்யலாம்;

(ஓ) உயர்கல்வி நிறுவனங்களினால் முனையப்படும் உயர்கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படு வதற்கு இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புக்கு (இதக) இணங்க தகைமைகளின் தோதான மட்டத்தின் மீது விதப்புரைகளைச் செய்யலாம்;

(ஔ) மாணவர்களின் குறுக்கு நகர்வுக்கு வசதியளிப்பதற்கு இலங்கை தகைமை கட்டுக்காப்பு (இதக) மற்றும் தேசிய வாழ்க்கைத்தொழிற் தகைமை கட்டுக்கோப்பு (தேவாதக) உள்ளடங்கலாக வாழ்க்கைத்தொழிற் தகைமைகளுக்கு எதிராக உயர்கல்வி தகைமைகளுக்கு எதிராக உயர்கல்விசார் தகைமைகளைத் திட்டமிடலாம்;

(க) உயர்கல்வியில் ஈடுபடுவதற்கு ஆட்களை இயலச் செய்யும் வயதெல்லைகள் மீதான எவையேனும் விதிவிலக்குகள் உள்ளடங்கலாக அத்தகைய ஆட்களுக்கு அவர்களின் ஆற்றல்கள், அனுபவங்கள்

மற்றும் இயலுமைகளை அடிப்படையாகக் கொண்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கு உயர்கல்வி நிறுவனங்களுக்கு விதந்துரைக்கலாம்;

(ங) உயர்கல்வி நிறுவனங்களில் தர சீராக்கங்களுக்காக விதப்புரைகளைச் செய்யலாம்;

(ச) உயர்கல்வி தொடர்பான தகவல்களை சேகரித்து பரப்பலாம் என்பதுடன் தராதர அங்கீகாரம்பெற்ற உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தராதர அங்கீகாரம்பெற்ற நிகழ்சித்திட்டங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணி நாளதுவரையாக்கலாம் அத்துடன் அத்தகைய தராதர அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களினதும் தராதர அங்கீகாரம்பெற்ற நிகழ்ச்சித்திட்டங்களினதும் பெயர்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்தில் வெளியிடலாம்;

(ஞ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அலுவலர் களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம் என்பதுடன் ஆணைக்குழுவுக்கு நிபுணர்களையும் குழுக்களையும் நியமிக்கலாம்;

(ட) ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட ஏதேனும் சேவைக்கான கட்டணங்கள் அல்லது விதிப்பனவு களை அறவிடலாம்;

(ண) அதன் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமானதான அத்தகைய உடன் படிக்கைகள், ஒப்பந்தங்களை செய்துகொள்ளலாம்;

(த) அவசியமாகக்கூடியவாறு எல்லா உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அவற்றின் உயர்கல்விசார் மற்றும் கல்விசார் பணியாட்டொகுதிக்கும் அவற்றின் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதல் மற்றும் நிறைவேற்றுதலுடன் சம்பந்தமாக சுற்றறிக்கைகளை வெளியிடலாம்;

(ந) உயர்கல்வியை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வியை வழங்குவதுடன் தொடர்பான அல்லது சம்பந்தமாக ஏதேனும் சேவையை ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் முனையும் அல்லது வழங்கும் வேறு ஒழுங்கமைப்புக்கள் அல்லது ஆட்கள் குழுக்களின் தராதர அங்கீகாரத்துக்காக ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட முறைமையொன்றை வடிவமைத்து நிருவகிக்கலாம்;

(ப) உயர்கல்விசார் சேவைகளுக்கான உள்ளீடு ஒப்படைப்பு மற்றும் தொழில்நுட்ப நியமங்கள் தொடர்பான செயல்முறைக் கோவைகளை அபிவிருத்திசெய்து வெளியிடலாம் என்பதுடன் அத்தகைய கோவைகளுடனான இணங்கியொழுகுதலை கண்காணிக்கலாம்;

(ம) ஐம்பத்தி இரண்டாம் பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட முறையில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றை ஏற்றங்கீகரிக்கலாம்;

(ய) உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று அல்லது தகைமைகள் பற்றிய தராதர அங்கீகாரத்தை வழங்குதலுடன் தொடர்பான குறைந்தபட்ச நியமங்களைத் தீர்மானிப்பதற்கு இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவைத் தேவைப்படுத்தலாம்;

(ர) ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் புரிதலுடன் தொடர்பான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி, அபிவிருத்தி கற்கைகள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டங்களில் ஈடுபடலாம்;

(ல) உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட தராதர அங்கீகாரம் அல்லது சான்றுப்படுத்துகை மற்றும் சோதனைக் குறிகள், குறிவுகளின் மட்டங்களை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் குறித்துரைக்கலாம் என்பதுடன் அத்தகைய குறிகள் அல்லது குறிவுகளைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தலாம்;

(வ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்வனவு என்ற வகையாக அல்லது வேறுவகையாகக் கொள்ளலாம் என்பதுடன் ஆணைக்குழுவின் அத்தகைய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வைத்திருக்கலாம் குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது கொடுக்கலாம் அல்லது வாடகைக்குவிடலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம் அத்துடன் விற்பனை செய்யலாம் அல்லது வேறுவகையாக கையுதிர்க்கலாம்;

(அஅ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஏதேனும் வங்கியுடன் வங்கிக் கணக்குகளை திறந்து பேணலாம் என்பதுடன் ஆணைக்குழுசார்பாக அத்தகைய கணக்கு அல்லது கணக்குகளை தொழிற்படுத்துவதற்கு எவரேனும் ஆளுக்கு அதிகாரமளிக்கலாம்;

(அஆ) இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஆணைக் குழுவின் பணிகளுடன் ஒத்த பணிகள் அல்லது கடமைகளைக் கொண்ட ஏதேனும் சர்வதேச குழுவின் உறுப்பினர் ஒருவர் அல்லது இணை உறுப்பினர் ஒருவராக ஆகலாம்;

(அஇ) ஆணைக்குழு தேர்ச்சி அல்லது நிபுணத்துவத்தை கொண்டுள்ள ஏதேனும் பரப்பில் ஆணைக் குழுவினாலும் சரி அல்லது ஏதேனும் வேறு

அதிகாரசபையுடன் இணைந்தும் சரி இலங்கையினுள்ளே அல்லது வெளியே ஆலோசனை சேவைகள் அல்லது ஏதேனும் தொழில்நுட்ப, முகாமைசார் அல்லது வேறு சேவைகளை வழங்கலாம்;

(அஈ) எத்தகையதுமான எவையேனும் மூலங்களிலிருந்து மானியக்கொடைகள் அல்லது உதவுதொகைகளைப் பெறலாம் என்பதுடன் எல்லா சட்டமுறையான வழிவகைகள் மூலம் நிதிகளைத் திரட்டலாம் அத்துடன் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகளைப் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அத்தகைய நிதிகளைப் பயன்படுத்தலாம்.

(அஉ) ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களுக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தில் உயர்கல்வியை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆட்களுக்கும் தாமாக அல்லது ஆணைக்குழு தகுதியானதென கருதுகின்ற எவரேனும் வேறு ஆளின் ஒத்துழைப்புடன் தர உறுதிப்பாடு தராதர அங்கீகாரம் மற்றும் இலங்கை தகைமைக் கட்டுக்காப்பில் (இதக) பயிற்சியை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பயிற்சிக்கான புலமைப் பரிசில்களையும் அளிக்கலாம்;

(அஊ) சட்டத்தின் கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்; அத்துடன்

(அஎ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு உசிதமானவாறான இச்சட்டத்தின் ஏற்பாடுகளு டன் ஒவ்வாததாக இராத அத்தகைய எல்லா வேறு செயல்களையும் செய்யலாம்.

## பாகம் II

### உயர்கல்வி நிறுவனங்களுக்கு தராதர அங்கீகாரமளித்தல்

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்தை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**10.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதனை தரம்குறைத்தலாகாது.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுறுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்திற்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனமும் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

**11.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனம் ஒன்றாக அதன் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அத்தகைய உயர்கல்வி நிறுவனத்துக்கு வசதியளிப்பதற்கென தராதர அங்கீகாரத்துக்காக ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய படிவம் மற்றும் முறையில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் –

(அ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் கீழும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று ஏலவேயுள்ளதுமான பாராளுமன்ற சட்டமொன்றின் மூலமும் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாக கருதப்பட்ட எல்லாப் பல்கலைக்கழகங்களும்; மற்றும்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று 1978ஆம் ஆண்டின் 16ஆம்

இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஆம் பிரிவின்கீழ் பட்டம் அளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட எல்லா உயர்கல்வி நிறுவனங்களும்,

இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு இச்சட்டத்தின்கீழ் முழுமையான தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய தராதர அங்கீகாரத்துக்காக ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்து உயர்கல்வி நிறுவனமொன்றின் விடயத்துக்கேற்ப முதன்மை நிறைவேற்று அலுவலர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது முதன்மை நிருவாக அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

புதிய உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு ஆரம்ப அனுமதிப்பை வழங்குதல்.

**12.** (1) புதிய உயர்கல்வி நிறுவனமொன்று அது தாபிக்கப்படுவதற்கு முன்னர் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய ஆவணங்கள் மற்றும் கட்டணங்களுடன் சேர்த்து ஏதேனும் தொழிற்பாட்டை தொடங்குவதற்கு முன்னர் பௌதிக உட்கட்டமைப்பைத் தொடங்குவதற்கு ஆரம்ப அனுமதிப்பு ஒன்றிற்காக ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்வதன் மீதும் ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழை வழங்குதல் தொடர்பாக ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை உயர் நிறுவனம் நிறைவேற்றியுள்ளது என திருப்திப்படுவதன் மீதும் அத்தகைய நிறுவனத்தைத் தாபிப்பது பொதுமக்கள் அக்கறைக்காகவும் கல்வி பொதுமக்கள் நன்மைக்காகவும் என ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்றவிடத்தும், ஆணைக்குழுவானது, அத்தகைய விண்ணப்பத் தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியொன்றினுள் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்காக ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய நிறுவனம் உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டமொன்றை முனைவதற்கு உட்கருதுகின்றவிடத்து ஆணைக்குழுவானது ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழை வழங்குவதற்கு முன்னர் இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(3) இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றை ஆணைக்குழு கலந்தாலோசிக்கின்றவிடத்து, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஆரம்ப அனுமதிப்பை வழங்குதலுடன் தொடர்பான கருமங்கள் தொடர்பில் ஒத்துழைப்பது அத்தகைய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு –

(அ) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட ஆரம்ப அனுமதிப்பை வழங்குவதற்கான கட்டளைக்கற்கள் நிறைவேற்றுவதற்கு உயர்கல்வி நிறுவனம் தவறுகின்றவிடத்து, ஆரம்ப அனுமதிப்புப் பற்றிய சான்றிதழை வழங்கமறுக்கலாம்;

(ஆ) ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் உயர்கல்வி நிறுவனத்தைத் தாபிப்பதில் முன்னேற்றம் எதுவும் இல்லாதவிடத்து ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழை இல்லாதொழிக்கலாம்; அத்துடன்

(இ) ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு உயர்கல்வி நிறுவனம் தவறுகின்றவிடத்து ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழை இல்லாதொழிக்கலாம்.

(5) ஆணைக்குழு, (4)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழின் மறுப்பொன்று அல்லது இல்லாதொழிப்பு விடயத்தில், மூன்று ஆண்டு காலப்பகுதியினுள்

அத்தகைய தவறுகையை நிவர்த்தி செய்வதற்கான அத்தகைய நடபடிகளை எடுப்பதற்கு உயர்கல்வி நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்.

**புதிய கல்விசார் நிறுவனம் ஒன்றிற்கு அல்லது ஏலவேயுள்ள உயர்கல்வி நிறுவனமொன்றிற்கு தராதர அங்கீகாரமளித்தல்.**

**13.** (1) உயர்கல்வி நிறுவனமொன்று மாணவர்களை நிரலிற் சேர்ப்பதற்கு முன்னர் ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழைப் பெற்றுக்கொண்டதிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் 11ஆம் பிரிவின்கீழ் அத்தகைய நிறுவனத்தின் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) பதினோராம் பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்று, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்று கழிந்ததன் பின்னர், 11ஆம் பிரிவின்கீழ் அத்தகைய நிறுவனத்தின் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) பதினோராம் பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் தவிர இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஏலவேயுள்ள உயர்கல்வி நிறுவனமொன்று 11ஆம் பிரிவின்கீழ்–

(அ) அந்நிறுவனம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உளதாயிருப்பின், அத்தகைய நிறுவனம் இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றினுள்ள தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அந்நிறுவனம் ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக உளதாயிருப்பின், அது ஏழு ஆண்டுகள் உளதாயிருந்தமையை நிறைவு செய்வதற்கு முன்னர் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது –

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய அத்தகைய நிறுவனத்துக்கு தற்காலிக தராதர அங்கீகாரம் அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழொன்றை வழங்கலாம்; அல்லது

(ஆ) தராதர அங்கீகாரம் வழங்கும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் தரமான கணக்காய் வாளர்களின் குழாத்தின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு நடபடிகளைஎடுப்பதற்கு அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தை தேவைப்படுத்தலாம்; அல்லது

(இ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

(5) ஆணைக்குழு (4)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக –

(அ) உயர்கல்வி நிறுவனத்தின் நிறுவனம்சார் கணக்காய்வுக்காக தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்குதலுடன் தொடர்பான விதித்துரைக்கப்பட்ட தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டு கட்டளைக்கற்களுடன் அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் இணங்கியொழுகுதலுடன் சேர்த்து தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் அறிக்கையையும்;

(ஆ) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் நிறுவனம்சார் கணக்காய்வு தொடர்பாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு வெளிநாட்டு உயர்கல்வி

நிறுவனம் ஒன்றுடன் இணைந்துள்ள அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் விடயத்தில் இயைபான வெளிநாட்டு அதிகாரியின் விதப்புரையையும்

கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

*புதியதொரு அல்லது ஏலவேயுள்ள தொரு உயர்கல்வி நிறுவனத்தில் உள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தராதர அங்கீகார மளித்தல்.*

**14.** (1) புதிய உயர்கல்வி நிறுவனமொன்று, ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழைப் பெற்றுக்கொண்டதிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியினுள் 11ஆம் பிரிவின்கீழ் அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் ஒவ்வொன்றிற்கும் தராதர அங்கீகாரத்துக் காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) பதினோராம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனம் ஒன்று இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்று கழிந்ததன்பின்னர், 11ஆம் பிரிவின்கீழ் அதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) பதினோராம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் தவிர இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஏலவேயுள்ள உயர்கல்வி நிறுவனமொன்று 11ஆம் பிரிவின்கீழ் –

(அ) அந்நிறுவனம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உளதாயிருப்பின், அத்தகைய நிறுவனம் இரண்டு ஆண்டு காலப்பகுதியொன்றினுள் அதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தராதர அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அந்நிறுவனம்ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக உளதாயிருப்பின், அது ஏழு ஆண்டுகள் உளதாயிருந்தமையை நிறைவுசெய்வதற்கும் முன்னர் அதன் நிகழ்ச்சித்திட்டங்களின் தராதர அங்கீகாரத்துக் காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய —

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்துக்கான தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழொன்றை வழங்கலாம்;

(ஆ) தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் நிவர்த்திசெய்யப்படின் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்துக்கு தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றித ழொன்றை வழங்கலாம்;

(இ) பிரிவு 15(4) இன் கீழ் ஆக்கப்பட்ட இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவின் விதப்புரைகளில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட விதப்புரைகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலப்பகுதியுடன் நிவர்த்தி செய்யப்படின் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தற்காலிக அல்லது முழுமை யான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழொன்றை வழங்கலாம்;

(ஈ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்கு தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றித ழொன்றை வழங்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ஆணைக்குழு —

(அ) அந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் அறிக்கையையும் உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களின் விடயத்தில்

15ஆம் பிரிவின்கீழ் இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்கு படுத்தும் குழுவின் விதப்புரையையும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனம் ஒன்றுடன் இணைந்துள்ள ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் விடயத்தில் இயைபான வெளிநாட்டு அதிகாரியின் விதப்புரைகளை,

கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

*உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர்தொழில் சார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தகைமைகள்.*

**15.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உயர்கல்வி நிறுவனமொன்று, அத்தகைய உயர்கல்வி நிறுவனம் முனைவதற்கு உட்கருதும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களின் தராதர அங்கீகாரத்தை வழங்குவதற்காக 14 ஆம் பிரிவின்கீழ் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றைப் பெறுவதன்மீது, ஆணைக்குழுவானது உயர்கல்வி நிறுவனத்திலிருந்து அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் காலப்பகுதி யொன்றினுள், விதப்புரைகளைச் செய்யும் நோக்கத்துக்காக அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விதப்புரைகளைச் செய்வதற்கு இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுக்கு எழுத்திலான கோரிக்கை யொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு, ஆணைக்குழுவிலிருந்து கோரிக்கையொன்றைப் பெற்றுக்கொள்கின்றவிடத்து, அத்தகைய உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது

ஒழுங்குபடுத்தும் குழு, அத்தகைய உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் எவையேனும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டத்துக்காக குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுடன் அத்தகைய உயர்கல்விசார் நிகழ்ச்சித்திட்டம் இணங்கியொழுகுகின்றதா என ஆணைக்குழுவுக்கு விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(4) இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்று, உயர்கல்வி நிறுவனமொன்றுக்கு தராதர அங்கீகாரம் வழங்க மறுப்பதற்கு விதப்புரைகளைச் செய்கின்றவிடத்து, அத்தகைய விதப்புரைகள் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய குறைவுபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எவையேனும் வழிமுறைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(5) நிவர்த்திசெய்வதற்கான பரிகார நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றினுள் ஆணைக்குழுவுக்கு மீள அறிக்கையிடுவதற்காகவும் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனத்துக்கு (4)ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட விதப்புரைகளை ஆணைக்குழு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனம் நிவர்த்திசெய்வதற்கான காலப்பகுதிக்கு நீடிப்பொன்றை தேவைப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய கோரிக்கை ஆணைக்குழுவுக்கு எழுத்தில் செய்யப்படலாம் என்பதுடன் ஆணைக்குழுவானது இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய கோரிக்கை தொடர்பில் கால நீடிப்பொன்றை வழங்கலாம்.

(7) இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு, உயர்கல்வி நிறுவனமொன்றிலிருந்து கோரிக்கையொன்றை நேரடியாகப் பெறுகின்றவிடத்து, அத்தகைய உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய கோரிக்கையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து உடனடியாக ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(8) வேறு ஏதேனும் எழுத்திலாக சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, விதப்புரைகளைச் செய்வதற்கு இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றைக் கோருகின்றவிடத்து, தராதர அங்கீகாரம் வழங்குதலுடன் தொடர்பான கருமங்கள் தொடர்பில் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்பது அத்தகைய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்கு தராதர அங்கீகாரம் வழங்கும் நோக்கத்துக்காக, இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகளை கவனத்திற்கு எடுத்தல் வேண்டும்.

*தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ்.*

**16.** (1) நிறுவனம் ஒன்றிற்கு அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்கு தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ், அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்கு வழங்கப்பட்ட தற்காலிக தராதர அங்கீகாரம் தொடர்பான அத்தகைய விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழைக் கொண்டிருப்பவர் பின்வருவனவற்றைச் செய்வதற்கு தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) அத்தகைய நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்குப் முழுமையான தராதர அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டுமா என தீர்மானிக்கும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தக்கூடியவாறாக காலத்துக்குக்காலம் அதன் செயற்பாடுகள் பற்றிய காலாகால அறிக்கைகளை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும்; அத்துடன்

(ஆ) பொதுமக்களின் தகவலுக்காக அதன் வளவுகளில் துலாம்பரமான ஓர் இடத்தில் சான்றிதழை வெளிக்காட்டி வைப்பதற்கும்.

*தற்காலிக தராதர அங்கீகாரத் திலிருந்து முழுமையான தராதர அங்கீகாரத்துக்கு மாற்றுதல்.*

**17.** (1) தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கும் உயர்கல்வி நிறுவனமொன்று ஒழுங்கு விதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்துடன் அத்தகைய காலப் பகுதியுள்ளும் விடயத்துக்கேற்ப நிறுவனத்தின் அல்லது அதன் நிகழ்ச்சித்திட்டத்தின் முழுமையான தராதர அங்கீகாரத்துக்காக ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் அறிக்கையின் மீது —

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் மீது அத்தகைய நிறுவனத்துக்கு அல்லது அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்துக்கு அல்லது அவ்விரண்டிற்கும் முழுமையான தராதர அங்கீகாரத்தை அளிக்கலாம்; அல்லது

(ஆ) தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட எவையேனும் பிரச்சினை

களை நிவர்த்தி செய்வதற்கு பத்து ஆண்டு அதிகபட்ச காலப்பகுதியொன்று வரை தற்காலிக தராதர அங்கீகாரக் காலப்பகுதியை நீடிக்கலாம்; அல்லது

(இ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக விண்ணப்பத்தை மறுக்கலாம்.

(3) அத்தகைய நிறுவனம் உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டமொன்றை முனைவதற்கு உட்கருதுகின்றவிடத்து, ஆணைக்குழு, 2ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக விதப்புரைகளைச் செய்வதற்கு இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுக்கு 15ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவாறு எழுத்திலான கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) உயர்கல்வி நிறுவனமொன்று அல்லது நிகழ்ச்சித்திட்டமொன்று முழுமையான தராதர அங்கீகாரம் அளிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய நிறுவனம் அல்லது அத்தகைய நிகழ்ச்சித் திட்டம் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளினுள்ளும் நிறுவனம்சார் கணக்காய்வு மற்றும் நிகழ்ச்சித்திட்டப் பரிசீலனைக்கு உட்படுதல் வேண்டும்.

தற்காலிக தராதர அங்கீகாரத்தை இல்லாதாக்குதல்.

**18.** (1) உயர்கல்வி நிறுவனமொன்று, தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் தேதியிலிருந்து பத்து ஆண்டு காலப்பகுதியொன்றினுள் முழுமையான தராதர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தவறுகின்றவிடத்து ஆணைக்குழுவானது தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இல்லாதாக்கலாம் என்பதுடன் -

(அ) உயர்கல்வி நிறுவனமொன்றின் விடயத்தில் அதன் செயற்பாடுகள் இல்லாதொழியும்படி; அல்லது

(ஆ) நிகழ்ச்சித்திட்டமொன்றின் விடயத்தில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தாதொழியும்படி அல்லது அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தை வழங்காதொழியும்படி,

அத்தகைய நிறுவனத்தைப் பணிக்கலாம்.

(2) ஆணைக்குழு, தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் ஒன்றை இல்லாதாக்குவதற்கு முன்னர் -

(அ) அத்தகைய இல்லாதாக்குதலுக்கான ஏதுக்களை குறித்துரைத்து தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இல்லாதாக்குவதற்கு அதன் உட்கருத்து பற்றிய எழுத்திலான அறிவித்தல் மூலம் உயர்கல்வி நிறுவனமொன்றின் விடயத்துக்கேற்ப பிரதான நிறைவேற்று அலுவலர்,முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லதுமுதன்மை நிருவாக அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) மூன்றாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றிற்கு அத்தகைய எழுத்திலான அறிவித்தல் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் எழுத்திலான முறையீடுகளைச் செய்வதற்கு (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கு வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் முறையீடுகளை கவனத்திற் கொள்வதற்கு தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின் உறுப்பினர்கள் அல்லாத அத்தகைய உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(4) குழுவானது, (2)ஆம் பிரிவின்கீழ் எழுத்திலான முறையீடு களை கவனத்திற்கொண்டதன் பின்னர், ஆணைக்குழுவுக்கு பின்வருவனவற்றைச் செய்வதற்கு விதப்புரைகளைச் செய்தல் வேண்டும் -

(அ) ஓராம் உட்பிரிவில் தற்காலிக தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இல்லாதாக்குவதற்கும்; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் முழுமையான தராதர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அத்தகைய பரிகார வழிமுறைகளை எடுப்பதற்கு அத்தகைய நிறுவனம் அல்லது ஆட்களைப் பணிப்பதற்கும்.

(5) குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகளுக்கு ஆணைக்குழு பயன்கொடுத்தல் வேண்டும்.

(6) உயர்கல்வி நிறுவனமொன்று (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் முழுமையான தராதர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தவறுகின்றவிடத்து, ஆணைக்குழு அத்தகைய நிறுவனத்தின் தற்காலிக தராதர அங்கீகாரத்தை இல்லாதாக்குவதற்கான அத்தகைய நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(7) உயர்கல்வி நிறுவனம் ஒன்று (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதன் செயற்பாடுகளை இல்லாதொழிக்கின்றவிடத்து, ஆணைக் குழுவானது, மாணவர்களின் கற்கைகளின் தொடர்ச்சியான நிலையை உறுதிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு போதிய வாய்ப்புக்களை வழங்குவதற்கு அல்லது மாணவர்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியை நியமிப்பதற்கு அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கு அத்தகைய நிறுவனத்தைப் பணித்தல் வேண்டும்.

(8) உயர்கல்வி நிறுவனமொன்று (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதன் செயற்பாடுகளை இல்லாதொழித்துள்ளவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய இல்லாதாக்குதல் பற்றிய அறிவித்தல் ஒன்றை அதன் இணையத்தளத்தில் இலங்கையில் புழக்கத்தில் உள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த, செய்தித்தாள்கள் ஒவ்வொன்றில் குறைந்தபட்சம் ஒன்றிலும் வெளியிடுதல் வேண்டும்.

இயைபான உயர்தொழில் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்கு படுத்தும் குழுவை ஏற்றங்கீகரித்தல்.

**19.** ஆணைக்குழு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விதித்துரைக்கப்பட்ட முறையில், உயர்தொழில் ஒன்று அல்லது தான் புரி தொழில் ஒன்றை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக தாபிக்கப்பட்ட உயர்தொழில் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றை ஏற்றங்கீகரித்தல் வேண்டும்.

*தராதர அங்கீகாரம் பற்றிய தற்காலிக அல்லது முழுமையான சான்றிதழின் பயன்.*

**20.** (1) ஆணைக்குழுவானது, எந்த நிறுவனங்கள் தொடர்பில் தராதர அங்கீகாரம் பற்றிய தற்காலிக அல்லது முழுமையான சான்றிதழ்கள் அளிக்கப்பட்டுள்ளதோ அந்த நிறுவனங்களின் பெயர்களை அதன் இணையத்தளத்தில் அல்லது இலங்கையில் புழக்கத்தில் உள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்கள் ஒவ்வொன்றில் குறைந்த பட்சம் ஒன்றிலும் வெளியிடுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(2) தராதர அங்கீகாரம் பற்றிய தற்காலிக அல்லது முழுமையான சான்றிதழ், நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் ஆணைக் குழுவினால் தராதர அங்கீகாரம் பெற்ற தற்காலிக அல்லது முழுமையான நிறுவனம் ஒன்றாக அல்லது நிகழ்ச்சித்திட்ட மொன்றாகவிருத்தல் வேண்டும் என்ற நிகழ்வு பற்றிய சான்றாக விருத்தல் வேண்டும்.

*தராதர அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களின் இடாப்பு.*

**21.** (1) ஆணைக்குழுவானது, தராதர அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களின் விபரங்களைப் பதியும் நோக்கத்துக் காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இடாப்பொன்றைத் தாபித்து பேணுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இடாப்பு, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவின்மீது அத்தகைய நேரங்களில் பொதுமக்களின் பார்வைக்காக கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

*உயர்கல்வி நிறுவன மொன்றின் கட்டமைப்பை மாற்றுதல் முதலியவற்றுக் கான முன்னங்கீகாரம்.*

**22.** தராதர அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனம் ஒன்று 15ஆம் பிரிவிற்கு அமைய –

(அ) இன்னொரு நிறுவனத்துடன் ஒன்று சேர்ப்பதன்மூலம் அதன் நிறுவனம்சார் கட்டமைப்பை மாற்றுவதற்கு; அல்லது

(ஆ) அதன் நிகழ்ச்சித்திட்டங்களை மாற்றுவதற்கு; அல்லது

(இ) தொழிற்பாட்டின்போது வேறு ஏதேனும் பரப்பில் மாற்றத்தை செய்வதற்கு,

உட்கருதுகின்றவிடத்து அத்தகைய முன்மொழியப்பட்ட மாற்றத்திற்கு முன்னர் ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரத்தை அது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இடைநிறுத்தல் அல்லது இல்லா தொழித்தல்.*

***23.*** *(1)* உயர்கல்வி நிறுவனமொன்று –

*(அ)* ஒடுக்கப்படுகின்றவிடத்து அல்லது வேறு வகையாக கலைக்கப்படுகின்றவிடத்து; அல்லது

*(ஆ)* தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழின் ஏதேனும் நியதி அல்லது நிபந்தனையை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்றவிடத்து; அல்லது

*(இ)* நாற்பத்தி ஒன்பதாம் பிரிவின் *(2)*ஆம் உபபிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மீது; அல்லது

*(ஈ)* தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவுக்கு பொய்யான தகவல்களை வழங்கியுள்ளவிடத்து; அல்லது

*(உ)* உளதாக இல்லாதொழிந்துள்ளவிடத்து,

ஆணைக்குழு முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்,

*(2)* ஆணைக்குழு, அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதொழிப்புக்கு முன்னர் –

*(அ)* அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லா தொழிப்புக்கான ஏதுக்களை குறித்துரைத்து முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதொழிப்பதற்கான அதன் உட்கருத்து பற்றிய அறிவித்தல் மூலம் உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் விடயத்துக்கேற்ப முதன்மை நிறைவேற்று அலுவலர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிருவாக அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவுக்கு அத்தகைய எழுத்திலான அறிவித்தல் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் எழுத்திலான முறையீடுகளைச் செய்வதற்கு (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கு வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும்.

(3) உயர்கல்வி நிறுவனம் ஒன்று (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் முறையீடுகளைச் செய்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது, வழங்கப்பட்ட காரணங்களை கவனத்திற்கொண்டதன் பின்னரும் உயர்கல்வி நிறுவனத்தை விசாரித்ததன் பின்னரும் ஒன்றில் –

(அ) முழுமையான தராதர அங்கீகாரத்தை இடைநிறுத்தல் அல்லது இல்லாதொழித்தல் பற்றிய அறிவித்தலை மீளப்பெறலாம்; அல்லது

(ஆ) முழுமையான தராதர அங்கீகாரத்தை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(4) முழுமையான தராதர அங்கீகாரத்தை இடைநிறுத்தல் அல்லது இல்லாதொழிக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட உயர்கல்வி நிறுவனத்துக்கு, அத்தகைய இடைநிறுத்துகை அல்லது அத்தகைய இல்லாதொழிப்புப் பற்றி உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இடைநிறுத்துகை அல்லது அத்தகைய இல்லாதொழிப்பு அத்தகைய அறிவிப்புத் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(5) முழுமையான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழொன்று இடைநிறுத்தப்படுகின்றவிடத்து அல்லது இல்லாதொழிக்கப்படுகின்ற விடத்து, ஆணைக்குழு, அத்தகைய இடைநிறுத்துகை அல்லது இல்லாதொழிப்பு பற்றிய அறிவித்தல் ஒன்றை அதன் இணையத்தளத்தில் அல்லது இலங்கையில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்கள் ஒவ்வொன்றில் குறைந்தபட்சம் ஒன்றிலும் வெளியிடுதல் வேண்டும்.

(6) தராதர அங்கீகாரம் பற்றிய முழுமையான சான்றிதழொன்று இடைநிறுத்தப்படுகின்றவிடத்து அல்லது இல்லாதொழிக்கப்படுகின்ற விடத்து, ஆணைக்குழுவானது, மாணவர்களின் கற்கைகளைத் தொடர்வதற்கு அவர்களுக்கான போதிய வாய்ப்புக்களை வழங்குவதற்கான அல்லது மாணவர்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கு அத்தகைய நிறுவனத்தை தேவைப்படுத்துதல் வேண்டும்.

*தராதர அங்கீகாரம் பற்றிய உயர்கல்வி நிறுவனம் ஒன்றாக விருப்பதாக பாசாங்கு செய்தல் சட்டத்தின்கீழ் தவறொன்றாதல்.*

**24.** ஏதேனும் உயர்கல்வி நிறுவனம், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளிற்கு இணங்க தராதர அங்கீகாரம் பெறாமல் –

(அ) அத்தகைய நிறுவனம் அல்லது அதன் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆணைக்குழுவினால் தராதர அங்கீகாரம் பெற்றுள்ளது என்ற நிகழ்வுக்கு பொது மக்களை பிழைவழியுய்க்கும் ஏதேனும் முறையில் விளம்பரப் படுத்தின்; அல்லது

(ஆ) தராதர அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றாக விருப்பதாக பாசாங்கு செய்து ஏதேனும் கற்கைநெறி, நிகழ்ச்சித்திட்டம் அல்லது தகைமையை முனைந்தால் அல்லது நடாத்தினால் மற்றும் கற்கைநெறிகள் நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது தகைமைகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்;

(இ) ஏதேனும் சட்டத்தை அளித்தால் அல்லது ஏதேனும் திப்புளோமா, சான்றிதழ் அல்லது வேறு கல்விசார் சிறப்பை வழங்கினால்; அல்லது

(ஈ) முறையீனமான முறையொன்றில் ஆணைக்குழுவின் குறிவைப் பயன்படுத்தினால்,

அத்தகைய உயர்கல்வி நிறுவனம் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றது.

(2) இச்சட்டத்தின்கீழ் தராதர அங்கீகாரத்தைப் பெற்ற உயர்கல்வி நிறுவனம் ஒன்று தவிர்ந்த நிறுவனம் எதுவும் எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பட்டத்தை அளித்தல் அல்லது ஏதேனும் திப்புளோமா, சான்றிதழ் அல்லது வேறு கல்விசார் சிறப்பை வழங்குதலாகாது.

(3) விடயத்துக்கேற்ப உயர்கல்வி நிறுவனமொன்றினால் அல்லது நிறுவனமொன்றினால் (1) அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்று புரியப்படுகின்றவிடத்து, விடயத்துக்கேற்ப முதன்மை நிறைவேற்று அலுவலர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிருவாக அலுவலர் நீதிவானால் விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*தரமான கணக்காய்வுக் குழாம்கள், நிலையியற் குழுக்கள் முதலியவற்றை நியமித்தல்.*

**25.** (1) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட கட்டளைக் கற்களை அடிப்படையாகக்கொண்டு நிறுவனம்சார் மற்றும் நிகழ்ச்சித்திட்ட கணக்காய்வுகளையும் வெளிப்புற தர உறுதிப்பாட்டு பரிசீலனைகளையும் நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவுக்கு உதவும் நோக்கத்துக்காக தர உறுதிப்பாட்டில் தகைமைகள் உள்ளடங்கலாக விசேடித்த தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களைக் கொண்டு தரமான கணக்காய்வுக் குழாம்கள் மற்றும் நிலையியற் குழுக்களின் அத்தகைய எண்ணிக்கையை ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிலையியற் குழுவிலும் ஆணைக்குழுவின் தவிசாளர் முழுநேர உறுப்பினராகவிருத்தல் வேண்டும்.

(3) தரமான கணக்காய்வுக் குழாத்தின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழு தீர்மானிக்கின்ற வாறான அத்தகைய படி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

நிபுணர்கள் அல்லது குழுக்களை ஆணைக்குழு நியமித்தல்.

**26.** (1) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் எந்த நோக்கமானது நிபுணர்களை அல்லது குழுக்களை நியமிப்பதன் மூலம் மேலும் துரிதமான முறையில் நிறைவேற்றப்படமுடியும் அல்லது முகாமைசெய்யப்பட முடியுமோ அந்த ஏதேனும் நோக்கத்துக்காக ஆணைக்குழு தோதானதாகக் கருதுகின்றவாறான அத்தகைய எவரேனும் நிபுணர்களை அல்லது அத்தகைய எண்ணிக்கையிலான குழுக்களை காலத்துக்குக்காலம் அது நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொருஆள் அல்லது குழுவின் விசாரணைக்குரிய விடயங்களை ஆணைக்குழு வரையறுத்துக் கூறுதலும் குறித்துரைத்தலும் வேண்டும் என்பதுடன் அவசியப்படுமிடத்து அல்லது நியமிக்கப் பட்ட எவரேனும் ஆளை அல்லது குழுவை பதவிநீக்குதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இப்பரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும், அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் சம்பந்தமான அதன் நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயம் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழு தீர்மானிக்கின்றவாறாக அத்தகைய படி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

ஆணைக் குழுவின் பிரிவுகளைத் தாபித்தல்.

**27.** (1) ஆணைக்குழு, பின்வரும் இரு பணியாற்றுகைசார் பிரிவு கள் உள்ளடங்கலாக பிரிவுகளின் அத்தகைய எண்ணிக்கையைத் தாபித்தல் வேண்டும் -

(அ) இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புப் பிரிவு; அத்துடன்

(ஆ) இலங்கை தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரப் பிரிவு

(2) ஒவ்வொரு பிரிவும், ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஆட்களின் அத்தகைய எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, காலத்துக்குக் காலம், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளை, கோரிக்கையில் குறிப்பிடப்பட வேண்டியவாறான அத்தகைய காலத்தினுள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமம் பற்றி அதன் தொழில்நுட்ப மதியுரைகளை வழங்குவதற்கு எழுத்தில் கோரலாம் என்பதுடன் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய கருமம் பற்றிய அதன் மதியுரையை வழங்குவது அத்தகைய பிரிவின் கடமையாதல் வேண்டும்.

இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புப் பிரிவின் பணிகள்.

**28.** இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புப் பிரிவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பை நாளது வரையாக்கலும் அதன் நடைமுறைப்படுத்தல் சந்தர்ப்பமான விதப்புரைகளைச் செய்தலும்;

(ஆ) வெளிநாட்டு பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்கள் அத்துடன் ஏற்றங்கீகரிப்புக்கான இயைபான இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பையும் (இதக) மதிப்பிட்டு ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(இ) பின்வருவன தொடர்பாக விதிகளை வகுத்தமையை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும் -

(i) தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளினதும் உயர்கல்வி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அளிப்புக்களினதும் பட்டங்கள் மற்றும் பெயரிடும்முறை; அத்துடன்

(ii) இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்புக்கு (இதக) ஏற்ப தகைமை விவரணங்கள் மற்றும் பட்ட விவரணங்கள்

(ஈ) உயர்கல்வித்துறையினுள்ளும் மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வித் துறையினுள்ளும் நகர்வுத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை வசதியளிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அத்தகைய விதப்புரைகளைச் செய்தலும் வாழ்க்கைத்தொழில் வழிகளை விதந்துரைத்தலும்;

(உ) வெவ்வேறு கல்வி நிறுவனங்களினால் முனையப்படும் தகைமைகளின் ஒப்பிடுதலை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவுக்கு விதப்புரைகளைச் செய்தலும்;

(ஊ) உயர்கல்வி நிறுவனங்களினால் தொழிலுக்கமர்த்தப் பட்ட ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்கள், அத்தகைய நிறுவனங்களில் முனையப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகள், பரீட்சைகள் மாணவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக்கப்படவேண்டிய சாதனம் மற்றும் வேறு வசதிகள் தொடர்பான நியமங்கள் உள்ளடங்கலாக அத்தகைய நிறுவனத்தினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச கல்விசார் நியமங்களை அவசியமேற் படுமிடத்து இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுடனான கலந்தாலோசனையுடன் தீர்மானித்தலும்;

(எ) பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை வழங்கும் நோக்கத்துக்காக, உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகளில் வழங்கப்பட்ட பயிற்சியின் தன்மையை தீர்மானித்தலும்;

(ஏ) உயர்கல்வி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அளிப்புக்களின் படிவம் மற்றும் எழுத்துப்பிரதி மொழி என்பனவற்றை தீர்மானித்தல்; அத்துடன் தராதர அங்கீகார அலகுடன் இயைபான ஒவ்வொரு தகவலையும் பகிர்தலும்.

(ஐ) தரஉறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார அலகின் பணியை வசதிப்படுத்துவதற்கு ஒவ்வோர் இயைபான தகவலையும் பகிர்தல்.

தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரப் பிரிவின் பணிகள்.

**29.** தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரப் பிரிவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை அளிக்கும் நோக்கத்துக்காக உயர்கல்வி நிறுவனங்களினால் முனையப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகள், வழங்கப்பட்ட கல்வியின் தரம் மற்றும் நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான நியமங்களை உள்ளடங்கலாக உயர்கல்வி நிறுவனத்தினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச கல்விசார் நியமங்கள் தொடர்பான விதிகளை வகுத்தமைத்தல் பற்றி அவசியமேற்படுமிடத்து உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவுடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(ஆ) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட பணியாட்டொகுதி, சாதனம், கற்பித்தல் வளங்கள் மற்றும் வேறு வசதிகளின் தரம் தொடர்பான கட்டளைக்கற்கள் மற்றும் நியமங்களை மதிப்பிட்டு ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தலும்;

(இ) எல்லா உயர்கல்வி நிறுவனங்களின் தரம் மற்றும் தராதரத்தை வெளிப்புற சரிவினை மீளாய்வு நடைமுறையொன்றினூடாக காலத்துக்குக்காலம் மதிப்பிடுதலும் அதனை ஆணைக்குழுவுக்கு ஆணையிடுதலும்;

(ஈ) தராதர அங்கீகார நோக்கத்துக்காக தேவைப்படுத் தப்பட்ட நியமத்தை எய்தியிராத உயர்கல்வி நிறுவன மொன்றினால் எடுக்கப்படவேண்டிய தேவைப் படுத்தப்பட்ட கட்டளைக்கற்கள் மற்றும் நியமங்கள் பற்றி ஆணைக்குழுவுக்கு விதப்புரைகளைச் செய்தலும்;

(உ) தகைமை கட்டுக்கோப்புப் பிரிவுடன் இயைபான ஒவ்வொரு தகவலையும் பகிர்தலும்.

*தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தை நியமித்தல்.*

**30.** (1) தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார பிரிவின் தலைவர், ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத்துடன் -

(அ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழு தோதானது என கருதுகின்றவாறான அத்தகைய பயிற்சியின் பின்னர் இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பின் (இதக) கணக்காய்வுகள் உள்ளடங்கலாக வெளிப்புற தரக் கணக் காய்வுகளின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக தரமான கணக்காய்வாளர்கள் குழாத்திலிருந்து கணக்காய்வாளர்களாக விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களை நியமித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (அ) என்னும் பந்தியினால் குறிப்பீடு செய்யப்பட்ட தரமான கணக்காய்வாளர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட வேலையின் பணியாற்றுகைக்கு அவசியமான நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான வெளிப்புற தர கணக்காய்வுகளின் பணியை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அத்தகைய கணக்காய்வை நிறைவேற்றுவதற்கு தேவைப் படுத்தப்பட்ட தரமான கணக்காய்வாளர்களின் மூன்றில் ஒரு பங்கினர் இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் ஒருவராக நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் தர உறுதிப்பாட்டுப் பிரிவின் தலைவரினால் நியமனக்கடிதம் ஒன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் தரமான கணக்காய்வாளர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கு, ஆணைக்குழுவின் ஏற்பாட்டுடன் தர உறுதிப்பாட்டுப் பிரிவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அவரால், அவனால் நிறைவேற்றப்பட்ட எவையேனும் வேலைகள் தொடர்பில் அத்தகைய ஊதியம் அல்லது படிகள் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்களினுள் நுழைவதற்கான ஆணைக் குழுவினால் அதிகார மளிக்கப்பட்ட தரமான கணக்காய் வாளர்களின் தத்துவம்.

**31.** (1) ஆணைக்குழுவினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட தரமான கணக்காய்வாளர்கள் குழுவொன்று இரண்டு வாரத்துக்குக் குறையாத எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்ததன் பின்னர் உயர்கல்வி நிறுவனமொன்றினுள் நுழைந்து பின்வருவனவற்றை நிச்சயிப்பதற்கு கணக்காய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக அத்தகைய பரிசோதனைகள், புலனாய்வுகள் அல்லது விசாரணையைச் செய்தல் வேண்டும்.

(அ) இயைபான தகைமையொன்றை வழங்குதல் அல்லது அளித்தலுக்கு இட்டுச்செல்லும் அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகள் விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுடன் இசைந்தொழுகுகின்றனவா எனவும்;

(ஆ) அத்தகைய எவையேனும் தகைமைகளை வழங்கும் அல்லது அளிக்கும் நோக்கத்துக்காக உயர்கல்வி நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் தேவைப்படுத்தப்பட்ட தேர்ச்சி பட்டம் தேவைப்படுத்தப் பட்ட தேர்ச்சி பட்டம் தேவைப்படுத்தப்பட்ட நியமத்தைக் கொண்டுள்ளதாக எனவும்;

(இ) அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உயர்கல்வி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட நிறுவனம்,

பணியாட்டொகுதி, சாதனம், உட்கட்டமைப்பு மற்றும் வேறு வசதிகள் விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நியமங்களுடன் இசைந்தொழுகுகின்றனவா எனவும்;

(ஈ) உயர்கல்வி நிறுவனத்தின் ஆளுகை, முகாமை மற்றும் நிதி ஒப்பேற்றத்தன்மை என்பன அத்தகைய நிறுவனத்தை தொழிற்படுத்துவதற்கு உகந்தனவா எனவும்;

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உயர்கல்வி நிறுவனம் ஒன்று, அத்தகைய நிறுவனத்துக்கு தரமான கணக்காய்வாளர்கள் குழாம் செல்வதற்கு முன்னர் சுயமதிப்பீட்டு அறிக்கையொன்றை இயைபான தரமான கணக்காய்வாளர்கள் குழாத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட தரமான கணக்காய்வாளர்கள் குழாம், அவ்வுட்பிரிவின்கீழ் கணக்காய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் அத்தகைய பரிசோதனை, புலனாய்வு அல்லது விசாரணையை செய்கின்ற விடத்து, குழாமானது அதன் கண்டுபிடிப்புகள் மற்றும் எவையேனும் விதப்புரைகள் எவையேனும் இருப்பின் பற்றிய அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்கு செய்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வொரு தரமான கணக்காய்வாளர்கள் குழாமும், அவ்வுட்பிரிவினால் அத்தகைய தரமான கணக்காய்வாளர்கள் குழாத்தின்மீது அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(5) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் தரமான கணக்காய்வாளர்கள்மீது அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் குழாத்தின் எவரேனும் தரமான கணக்காய்வாளரை ஆளெவரும் முட்டுக்கட்டையிடுதல் அல்லது எதிர்த்தல் ஆகாது.

## பாகம் III

### ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர்

**32.** (1) ஆணைக்குழு, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு, அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது உயர் மட்ட முகாமை மற்றும் வேலை அனுபவம் அத்துடன் தர உறுதிப்பாடு மற்றும் இலங்கை தகைமை கட்டுக்கோப்பு (இதக) துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவரை ஆணைக்குழுவுக்கான செயலாளராக நியமித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட செயலாளரானவர் முழுநேர அலுவலர் ஒருவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் பதிவேடுகள் மற்றும் ஆதனத்தின் கட்டுக்காப்புக்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும், அத்துடன் உதவிக் கணக்கீட்டு அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஆணைக்குழு நிதிக்கட்டுப்பாட்டாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்; அவர் முழு நேர அலுவலர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

(5) நிதிக்கட்டுப்பாட்டாளர், செயலாளரின் பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைய, ஆணைக்குழுவின் நிதி நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அதன் கணக்குகளைப் பேணுதலும் வேண்டும் அத்துடன் ஆணைக்குழுவின் நிதிகளின் கட்டுக்காப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணைக் குழுவுக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்

**33.** (1) ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரின் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சம்மதத்துடன் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் ஆணைக் குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் ஆணைக் குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழு உடன்படிக்கையொன்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்காக ஆணைக்குழுவுக்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினாலான ஆணைக்குழுவுக்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கீழான கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் ஊதியம்.*

**34.** ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் வேறு உறுப்பினர்களுக்கும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய விதங்களில் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து அத்தகைய ஊதியம் மற்றும் படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் இலச்சினை.*

**35.** (1) ஆணைக்குழுவின் இலச்சினையானது –

(அ) செயலாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் எவரேனும் உறுப்பினரின் சமுகத்திலன்றி ஏதேனும் சாசனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப் படுதலாகாது; அத்துடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினை எந்தச் சாசனங்களில் அல்லது ஆவணங்களில்பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாசனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றை ஆணைக்குழு பேணுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவின் பணியாட் டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு*

**36.** ஒழுக்காற்றுக் கருமங்கள் தொடர்பான தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட எவையேனும் சுற்றறிக்கைகள் அத்துடன் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அவசியமாகக்கூடிய அளவுவரை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையதாதல் வேண்டும்.

தத்துவத்தைக் கையளித்தல்

**37.** (1) ஆணைக்குழுவானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் ஆணைக்குழுவின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அல்லது எவரேனும் வேறு அலுவலருக்கு கையளிக்கலாமென்பதுடன், தவிசாளர் அல்லது அத்தகைய வேறு உறுப்பினர் அல்லது அலுவலர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேட அல்லது பொதுப் பணிகளுக்கு அமைய அத்தகைய தத்துவம், பணி அல்லது கடமையை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது அல்லது கையிழக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய தத்துவம், பணி அல்லது கடமையை பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

## பாகம் IV

## நிதி ஏற்பாடுகள்

ஆணைக் குழுவின் நிதியம்

**38.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்தினுட் செலுத்தப் படுதல் வேண்டும்.

(அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக பாராளு மன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஆ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் நன்கொடைகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) பின்வருவனவற்றிற்கு அறவிடப்பட்ட கட்டணங்களாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(i) உயர்கல்வி நிறுவனங்களின் தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு;

(ii) உயர்கல்வி நிறுவனங்களுக்கான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் அத்துடன்;

(iii) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட ஏதேனும் வேறு சேவை.

(3) பின்வருவன ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட எல்லா செலவினத்தையும் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தினால் அல்லது அதன்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் செலவு.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**39.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறெல்லா கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றி முறையான

கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் அவை வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி ஓராம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் நிதிக்கட்டுப்பாடு மற்றும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு ஆண்டும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் கணக்குகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய கணக்குகளை கணக்காய்வு செய்வதில் அவருக்கு உதவும் நோக்கத்துக்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி, அவரது பணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் செயலாற்றவேண்டிய எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களின் சேவைகளை ஈடுபடுத்தலாம்.

(6) ஆணைக்குழுவின் கணக்குகளை கணக்காய்வுசெய்வதில் அவரால் உறப்பட்ட செலவினத்தை எதிர்கொள்ளும் நோக்கத்துக்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சர் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் ஆணைக்குழுவிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஊதியம், அத்தகைய கணக்காய்வு நோக்கத்துக்காக அவரால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அவரால் செலுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை கழித்ததன் பின்னர் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்ற சொல்லமைப்பு என்பது —

(அ) சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவுள்ளவரும் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டுள்ளவருமான தனியாள்; அல்லது

(ஆ) எந்த கணக்காளர்கள் குழுமம் ஒன்றின் வதிவுள்ள பங்காளர்கள், சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அந்த கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்

(8) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் கணக்குகளைப் பரிசோதனை செய்தல் வேண்டும் என்பதுடன் -

(அ) அவரால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக் கொண்டுள்ளாரா அல்லது பெற்றுக்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டு;

(ஆ) அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகள் அவ்வாணைக்குழுவின் நிதி நிலைமையின் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வெளிக்காட்டும் வகையில் தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் குறிப்பிட்டு; அத்துடன்

(இ) அவரது அபிப்பிராயத்தில் அந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளினதும் கணக்குகளினதும் ஏதேனும் பரிசோதனையில் பாராளுமன்றம் அக்கறை கொள்ளக்கூடிய கணக்குகளிலுள்ள ஏதேனும் விடயத்துக்கு கவனத்தை ஈர்த்தும் -

அறிக்கையொன்றை கொடுத்துதவுதல் வேண்டும்.

(9) கணக்காய்வாளர் தலைமையதிபதி, அவரது அறிக்கையை ஆணைக்குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை, ஆணைக்குழுவினால் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவானது, அத்தகைய அறிக்கை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருமங்கள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய, எடுக்கப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நடபடிகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(11) எந்தக் கணக்குகள் பற்றிய கூற்றுடன் அறிக்கை தொடர்பானதாகவுள்ளதோ அந்தக் கணக்குகள் பற்றிய கூற்று அமைச்சருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்; அவர் அத்தகைய கணக்குகள் மற்றும் அறிக்கை எந்த ஆண்டு பாராளுமன்றத்தில் இடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் தவிசாளர், பாராளுமன்றத்தின் பகிரங்கக் கணக்குகள் குழுவின் முன்னர் எழும் எவையேனும் கேள்விகளுக்கு சமுகமளித்து பதிலளித்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் வருடாந்த வரவு செலவுத்திட்டம்.

**40.** ஆணைக்குழுவானது ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பில் வரவுசெலவுத்திட்டமொன்றைத் தயாரித்தலை செய்வித்தல் வேண்டும்; அது வரவுசெலவுத்திட்டம் தொடர்புபடுகின்ற நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**கடனெடுப் பதற்கான தத்துவம்**

***41.*** ஆணைக்குழுவானது, எந்த அமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்காக ஆணைக்குழு தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையாக அல்லது வேறு வகையாக தற்காலிகமாக கடனாகப் பெறலாம்:

ஆயின், இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

**ஆணைக் குழுவின் பணத்தை முதலீடு செய்தல்**

***42.*** ஆணைக்குழுவானது, ஆணைக்குழு தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அதன்பணத்தை முதலீடு செய்யலாம் அல்லது அதனால் உறப்பட்ட எவையேனும் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கு இணங்க அதன் உடைமையில் இணைவுறுவாக உள்ள ஏதேனும் அசையா ஆதனத்தை அந்நோக்கத்துக்காக பயன்படுத்தலாம்.

## பாகம் V

## பொது

**ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை துடர்ச்சி அல்லது குற்ற வழக்கிலிருந்து பாதுகாத்தல்**

***43.*** (1) குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பெதுவும், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் புரிவதில் அல்லது பிரயோகிப்பதில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்காகவும் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரை அல்லது அலுவலரை அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரைப் பற்றுவதாதலாகாது.

(2) ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிரான ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவு ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் அந்நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டம் அல்லது ஏதேனும் தோதான சாதனம் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உற்பட்ட ஏதேனும் செலவு, நீதிமன்றம் செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது எனத் தீர்த்தால் அத்தகைய செலவு அத்கைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**44.** (1) ஆணைக்குழுவானது பின்வரும் நோக்கங்களுக்காக தகவல் நிலையமொன்றை தாபித்தல் வேண்டும் :- *தகவல் நிலையமொன்றைத் தாபித்தல்*

(அ) ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட அல்லது தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட இலங்கையினுள்ளேயும் வெளியேயும் உள்ள அரச, தனியார், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்கள் பற்றி நிரல் ஒன்றை வழங்குதல் உட்பட தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு, தகைமைகளின் வெவ்வேறு வகைகள் அத்துடன் நிறுவனம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தில் ஒவ்வொரு வகைக்கான அணுக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குதலும்;

(ஆ) உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான அணுக்கம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி மாணவர்களுக்கு மதியுரையை முனைதலும்.

(2) ஆணைக்குழுவானது உயர்கல்வி சம்பந்தமான தகைமைகளின் ஏற்றங்கீகரிப்புக்கு வசதியளிப்பதற்கென இயைபான, செம்மையான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஆணைக்குழு, 21ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட இடாப்பை பொது மக்களின் பார்வைக்காக கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீடு.

**45.** (1) ஆணைக்குழுவானது, அது தெரிவு செய்கின்றவாறான அல்லது உருவாக்குகின்றவாறான அத்தகைய சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீட்டைப் பயன்படுத்துவதற்கு புறநீங்கலான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்பின்னர் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீட்டை வெளிக்காட்டிவைத்தல் அல்லது காட்சிக்கு வைத்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட சின்னமொன்றை, வடிவமைப்பை அல்லது குறியீட்டை பயன்படுத்துகின்ற அல்லது ஆணைக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீட்டுடன் ஒத்ததாகவுள்ள அல்லது ஏமாற்றும் வகையில் அல்லது மயக்கத்தை விளைவிக்கும் வகையில் அல்லது ஏமாற்றக்கூடிய வகையில் மயக்கத்தை விளைவிக்கக்கூடிய வகையில் ஏதேனும் அத்தகைய சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீட்டை அவ்வாறு ஒத்திருக்கின்ற ஏதேனும் சின்னம், வடிவமைப்பு அல்லது குறியீட்டைப் பயன்படுத்துகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இரண்டு இலட்சத்தை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் பகிரங்க அலுவலர்களாக கருதப்படுதல்*

**46.** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஆணைக் குழுவானது இலஞ்சச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.*

**47.** ஆணைக்குழுவானது (26ஆம் அத்தியாயமான) இலங்கைச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அமைச்சரவையின் பணிப்புகள்*

**48.** அமைச்சர், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட இயைபான பணிப்புகளை காலத்துக்குக்காலம் அறிவிக்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுப்பது ஆணைக்குழுவின் கடமையாதலும் வேண்டும்.

*பொதுத்தண்டம்.*

**49.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியை அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை அல்லது ஆணைக்குழுவின் ஏதேனும் முடிபு, பணிப்பு, கட்டளை அல்லது தீர்மானத்தை மீறுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தில் வேறுவகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர நீதிவான் ஒருவரினாலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது இருநூறாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்குஅல்லது இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத மறியற்றண்டனை காலப்பகுதிக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாக்கப்பட்டதன் மேல், நீதிவான் ஒருவர் அத்தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கு மேலதிகமாக அல்லது பதிலாக, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றிற்கு முன்னர் பாகம் II இன் கீழ் வழங்கப்பட்ட அந்தஸ்தை இல்லாதொழிப்பதைப் பணிக்கும் கட்டளையை ஆக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கான குற்றவழக்கெதுவும் ஆணைக்குழுவின் எழுத்திலான வலுவளிப்புடன் தவிர தொடுக்கப்படுதலாகாது.

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் அல்லது பங்காண்மை ஒன்றினால் புரியப்பட்ட தவறுகள்

**50.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியின் கீழ் தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அவ்வாட்கள் குழு —

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விடயத்துக்கேற்ப முதன்மை நிறைவேற்று அலுவலர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிருவாக அலுவலர் உள்ளடங்கலாக அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும்; அல்லது

(ஆ) பங்காண்மையொன்றாகவிருப்பின் அத்தகைய பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், விடயத்துக்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது முதன்மை நிருவாக அலுவலர் அல்லது பங்காண்மையொன்றின் பங்காளர் ஒருவர், அவர் அல்லது அவள் அத்தகைய தவறு அவரது அறிவின்றி புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதை தடுப்பதற்கு அவசியமானதாகவிருந்த உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால் அத்தகைய தவறுக்கு குற்றவாளியாதல் ஆகாது.

**51.** ஆணைக்குழு பின்வருவன தொடர்பில் விதிகளை ஆக்கலாம் - விதிகள்

(அ) தரமான கணக்காய்வுக் குழாத்துக்கான பல்வேறு அலுவலர்களின் நியமனம், ஊழியம் மற்றும் நீக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள், நடத்தை மற்றும் ஊதியக் கொடுப்பனவு;

(ஆ) ஆணைக்குழுவின் கூட்டங்கள், வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் அதிவிசேட கூட்டங்களைக் கூட்டுவதிலும் நடாத்துவதிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(இ) ஆணைக்குழுவின் அலுவல்களின் முகாமை;

(ஈ) தராதர அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனமொன்றினால் ஆணைக்குழுவின் அரசாங்கக் குறிவு மற்றும் சின்னத்தைப் பயன்படுத்துதல்;

(உ) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எல்லாக் கருமங்கள்.

**52.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் விதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றின் எவை தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் -

(அ) இலங்கை தகைமை கட்டுக்கோப்பை (இதக) தீர்மானித்தல்;

(ஆ) உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவொன்றினால் வழங்கப்பட்ட குறைந்தபட்ச கல்வி நியமனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரத்தை அளிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய நிறுவனங்களின் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களின் கல்வியின் கல்விசார் நியமங்கள் உள்ளடங்கலாக தரம் மற்றும் நியமங்களின் மதிப்பீடு மற்றும் மதிப்பீடு செய்தல்;

(இ) வெளிநாட்டு பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை ஏற்று அங்கீகரிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள் மற்றும் கல்விசார் சிறப்புகளை மதிப்பிடுதல்;

(ஈ) தற்காலிக அல்லது முழுமையான தராதர அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கும் அல்லது அவற்றை வழங்கும் நோக்கத்துக்கான படிவம், முறை, கட்டளைக்கற்கள், காலப்பகுதிகள் மற்றும் வேறு வழிகாட்டுநெறிகள்;

(உ) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட தராதர அங்கீகாரம் சான்றிதழ்கள் மற்றும் வேறு ஆவணங்களுக்கான விண்ணப்பங்களுக்கான படிவம்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் சேவைக்காக விதிக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்;

(எ) ஆரம்ப அனுமதிப்பை வழங்குவதற்கான படிவம், முறை மற்றும் கட்டளைக் கற்கள்; அத்துடன்

(ஏ) உயர்தொழில்சார், நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழுவை ஏற்று அங்கீகரிக்கும் முறை மற்றும் மாதிரி.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அதே போன்ற ஒழுங்குவிதி ஒன்றினால் எச்சந்தர்ப்பத்திலும் திருத்தப்படலாம், சேர்க்கப்படலாம் வேறுபடுத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

*அலுவலக முறையிலான இரகசியம்*

**53.** இச்சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும், அவரது கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின் கீழான அவரது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் அவரது அறிவுக்கு வரக்கூடியவாறான ஏதேனும் தகவல் தொடர்பில் கண்டிப்பாக இரகசியம் பேணுவதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் தகவலை பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர வெளிவிடா திருப்பாரென அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும் –

(அ) அவ்வாறு செய்யும்படி ஒரு சட்ட நீதிமன்றத்தால் தேவைப்படுத்தப்படும் போது; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் எவற்றுடனும் இணங்கி யொழுகுவதற்கும்.

சிரமங்களை நீக்குதல்.

**54.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்கு பயன்கொடுப்பதில் ஏதேனும் சிரமம் ஏற்படின், அமைச்சர் இக்கட்டளை நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்காக சிரமத்தை நீக்குவதற்கு அவசியமென அல்லது உசிதமென அவருக்குத் தோன்றுகின்றவாறு இச்சட்டத்தின் V அல்லது ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிடையில் ஒவ்வாததாக இராத அத்தகைய ஏற்பாட்டை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அத்தகைய கட்டளைமூலம் செய்யலாம்.

(2) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் அது ஆக்கப்பட்டதன் பின்னர் செயல்முறைக்கு உகந்தவாறு விரைவாக பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### நிலைபெயர்கால ஏற்பாடுகள்

தகைமைகள் கட்டுக்கோப்புப் பிரிவு மற்றும் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகார ஆணைக்குழு தாபிக்கப்படும் வரையான விசேட ஏற்பாடுகள்.

**55.** (1) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் -

(அ) இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டு ஒகத்து மாதம் 22ஆந் தேதிய 1824/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 137ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றிற்கு தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால்

வெளியிடப்பட்ட இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பு (இதக) இச்சட்டத்துக்கு ஒவ்வாததாகவிராத அளவு வரை, அது இச்சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டாலேயொழிய தொடர்ந்து வலுவில் இருத்தல் வேண்டும்;

(இ) (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி எட்டாம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவை தாபிக்கும் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றிற்கு, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாக கருதப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஆம் பிரிவின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) பந்தி இ(i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி கழிந்ததன் பின்னர், தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம் பணிகள் தொடர்பாக 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஆம் பிரிவின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பாக பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(ஈ) (i) அமைச்சர், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70இ(1) மற்றும் (2) என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழு தாபிக்கப்படும் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதியொன்றிற்காக ஏதேனும் நிறுவனத்தை பட்டம் அளிக்கும் நிறுவனம் ஒன்றாக ஏற்றங்கீகரிக்கலாம்; அத்துடன்

(ii) பந்தி (ஈ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி கழிந்ததன் பின்னர், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70(இ)(1) மற்றும் (2) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25அ என்னும் பிரிவில் உள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது அத்தகைய பட்டம் அளிக்கும் நிறுவனங்கள் தொடர்பான தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பாக பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(உ) (i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி எட்டாம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70ஈ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 70ஆ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழு தாபிக்கப்படும் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதியொன்றிற்காக பட்டம் அளிக்கும் நிறுவனங்களின் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரத்திற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) பந்தி (உ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி கழிந்ததன் பின்னர், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70ஈ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 70ஆ என்னும் பிரிவின் கீழான ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, அத்தகைய பட்டம் அளிக்கும் நிறுவனங்கள் தொடர்பான தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பாக பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(ஊ) பந்தி (இ) (i) இன்கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தவிர குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நிறைவேற்றப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று நிறைவுசெய்யப்படாததுமான ஏதேனும் செயற்பாடு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இராதிருந்தாலொழிய ஆணைக்குழுவினால் நிறைவு செய்யப்படுதல் வேண்டும்;

(எ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர் முன்னரான நாளன்று ஏலவேயுள்ள குறித்துரைக் கப்பட்ட அதிகாரியின் எல்லாப் பொறுப்புக்களும் ஆணைக்குழுவின் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் இ( i), (ஈ)(i) மற்றும் உ(i) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக அமைச்சர் ஆணைக்குழுவின் பணியாற்றுகைக்காக பூர்வாங்க அல்லது உட்கட்டமைப்பு ஒழுங்கேற்பாடுகள் சம்பந்தமாக கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான மேலதிக காலப்பகுதியொன்றிற்கு ஆறு மாத காலப்பகுதியை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அக்கட்டளைமூலம் நீடிக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய நீடிப்பு ஓராண்டை விஞ்சுதலாகாது.

**56.** இச்சட்டத்தில் - பொருள்கோடல்.

"அமைச்சர்" என்பது, எந்த அமைச்சருக்கு உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்.

"தராதர அங்கீகாரம்" என்பது, நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் தேவைப்படுத்தப்பட்ட எதிர் பார்க்கப்பட்ட நியமம் மற்றும் தரத்தை எதிர் கொண்டுள்ளது எனச் சான்றுபடுத்தி உயர்கல்வி நிறுவனம் ஒன்றிற்கு அல்லது சான்றிதழ், திப்புளோமா, பட்டம் அல்லது வேறு ஏதேனும் தகைமையை அளித்தலுக்கு இட்டுச்செல்லும் அத்தகைய நிறுவனத்தினால் நடாத்தப்படும் குறித்த கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு அலுவலக முறையான ஏற்றங்கீகரிப்பை அளித்தல் எனப் பொருள்படும்;

"உயர்கல்வி" என்பது, ஏதேனும் சான்றிதழ், திப்புளோமா, பட்டம் வேறு ஏதேனும் உயர் தகைமை அல்லது அதற்கு சமமானதை அளிப்பதற்கு இட்டுச் செல்லும் ஏதேனும் கல்விசார் கற்கை அல்லது சம்பிரதாய, திறந்த மற்றும் தொலைக் கற்கை மாதிரிகளில் அல்லது இணைந்த படிப்பு மாதிரிகளில் வழங்கப்படும் உயர்வான இரண்டாம் பட்டத்துக்கு அப்பாலான வேறு கற்கைகள் எனப் பொருள்படும்;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, சான்றிதழ், திப்புளோமா பட்டம் அல்லது வேறு ஏதேனும் தகைமைக்கு இட்டுச் செல்லும், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 147ஆம் பிரிவில் "உயர்கல்வி நிறுவனம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் கீழ் வரையறுத்துக்கூறப்பட்ட உருவகம் ஒன்று அல்லது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள்

அல்லது உயர்படிப்புக்கான நிலையம், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவின்கீழ் உயர்கல்வி நிறுவகம் ஒன்றாக அல்லது உயர்படிப்புக்கான நிலையமாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் அல்லது கல்லூரி, பாராளுமன்றத்தின் ஏதேனும் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட உயர்கல்வியை வழங்கும் 25 அ என்னும் பிரிவின்கீழ் பட்டம் அளிக்கும் நிறுவகங்களாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவகம், வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றுடன் அல்லது வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட தாயினுஞ்சரி ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உயர்கல்வியை வழங்கும் ஏதேனும் வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனம் எனப் பொருள்படும்;

''சனாதிபதி'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி எனப் பொருள்படும்;

''ஆரம்ப அனுமதிப்பு பற்றிய சான்றிதழ்'' என்பது, உயர்கல்வி நிறுவனம் ஒன்று அதன் தொழிற்பாடுகளை தொடங்குவதற்காக பௌதீக உட்கட்டமைப்பைத் தாபிப்பதற்கு முன்னர் அதற்கு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் எனப் பொருள்படும்;

''விதித்துரைக்கப்பட்டது'' என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

''உயர்தொழில்சார்'' அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு' என்பது, அத்தகைய ஏதேனும் உயர்தொழிலில் தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பான நியமங்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிபுணத்துவ தொழிலர்கள் குழுவொன்று எனப் பொருள்படும்;

"நிகழ்ச்சித்திட்டம்" என்பது, உயர்தொழில்சார் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கற்கைநெறி உள்ளடங்கலாக, இலங்கை தகைமைகள் கட்டுக்கோப்பு மட்டம் 3 மற்றும் அதற்கு மேல் தகைமைகளை அளிப்பதற்கு இட்டுச்செல்லும் தனித்துவமாக அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பாடவிதானம் ஒன்று எனப் பொருள்படும்;

"உயர்தொழில்சார் நிகழ்ச்சித்திட்டம்" என்பது குறித்த உயர்தொழில் ஒன்று அல்லது உயர்தொழில்சார் தகைமைக்கு மாணவரை தயார்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றை உள்ளடக்கும்;

"இயைபான உயர்தொழில்சார் அல்லது நியதிச்சட்ட முறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு" என்பது, இச்சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு உயர் தொழில்சார் அல்லது நியதிச்சட்டமுறையான அல்லது ஒழுங்குபடுத்தும் குழு எனப் பொருள்படும்;

"இலங்கை தகைமைக் கட்டுக்கோப்பு" என்பது, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான தேசிய கட்டுக்கோப்பு எனப் பொருள்படும்;

"குறித்துரைக்கப்பட்ட அதிகாரி" என்பது, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, 70ஆ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட எவரேனும் அதிகாரி எனப் பொருள்படும்;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும்;

**57.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்